பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 07 2024 12 40
புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேளாண்துறை முக்கிய பங்காற்றும் என மத்திய அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
2. மனித உரிமைகளை காக்க இந்தியா எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச மனித உரிமைக்குழு பாராட்டு தெரிவித்துள்ளது.
3. ஆந்திர மாநிலத்தின் கோரிக்கைகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா-வை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.
4. காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 21 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.
5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சகாஜா எமாலப்பள்ளி - ஜப்பானின் ஹிரோகோ குவாட்டா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ----

**[]<<<>>>[]**

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க பிரதமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்ட வரும் முயற்சிகளுக்கு வேளாண்துறை முக்கிய பங்களிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஸான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தில் நடைபெற்ற 96-வது நிறுவன மற்றும் தொழில்நுட்ப தின நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய பொருளாதாரத்தின் உயிர் மூச்சாக வேளாண் துறையும், முதுகெலும்பாக உழவர் பெருமக்களும் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

விவசாயத்திற்கும்,, விவசாயிகளின் நலனுக்கும் மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாகத் தெரிவித்த அவர், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை எட்டுவதற்கு அரசு முழுமூச்சுடன் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

இந்நிகழ்ச்சியின்போது 25 பயிர் ரகங்களை அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌஹான் வெளியிட்டார்.

விவசாயிகளின் பயன்பாட்டுக்குத் தேவையான இடுபொருட்களையும் அவர் வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

ஜெனிவாவில் உள்ள சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த மனித உரிமைக்குழுவின் நான்காவது ஆய்வை இந்தியா வெற்றிகரமாக முடித்துள்ளது.

இந்திய அரசின் தலைமை வழக்றிஞர் திரு வெங்கட்ரமணி, சொலிஸிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆகியோரைக் கொண்ட இந்திய குழுவினர் இந்த பணியை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.

மேற்கு மண்டலத்திற்கான வெளியுறவுத்துறை செயலர் திரு பவன் கபூர், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், சமூக நீதித்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, சிறுபான்மை விவகாரங்கள் துறை, பழங்குடியினர் நலத்துறை, உள்துறை உள்ளிட்ட அமைச்சகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இந்த குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இந்த மனித உரிமை குழுவின் ஆய்வுக்கு உதவ 18 பேர் கொண்ட நிபுணர்களும் இடம்பெற்றிருந்தனர்.

சர்வதேச மனித உரிமைக்குழுவிடம் இந்தியா சார்பில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்தது.

பல்வேறு துறைகளில் மனித உரிமையை நிலைநாட்ட இந்தியா கடைபிடித்து வரும் உறுதிப்பாடு குறித்தும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைக்குழு இந்தியாவின் பாரம்பரியத்தையும், மரபுகளையும் பாராட்டியதோடு, பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் அஹிம்சை வழிமுறைகள் குறித்த மனிதாபிமான மாண்புகள் போற்றத்தக்கவை என்றும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பாராட்டியது.

**[]<<<>>>[]**

ஆந்திர மாநிலத்தின் கோரிக்கைகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா-வை நேற்று புதுதில்லியில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த சந்திப்பின்போது மாநிலத்தின் நிதி நிலைமை குறிததும், இது தொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள நான்கு வெள்ளை அறிக்கைகள் குறித்தும் விவாதித்தார்.

கடந்த ஆட்சியின்போது ஏற்பட்ட பொருளாதார சீர்கேடு மற்றும் ஊழல் காரணமாக மாநிலத்தின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாக திரு சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

மத்திய மாநில அரசுகள் இணைந்து ஆந்திர மாநிலத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான திட்டத்தை வகுக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

தமிழக ஆளுநர் திரு ஆர். என் ரவி இன்று புதுதில்லியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்பேதது கல்வி தொடர்பான முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி மற்றும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர்கள் அம்மாநில ஆளுநர் திரு ஆனந்தபோஸ் குறித்து அவதூறான மற்றும் தவறான தகவல்களை சமூக வலைதளங்களில் பதிவிடக்கூடாது என்று கொல்கத்தா உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதி திரு கிருஷ்ணாராவ், அடுத்த மாதம் 14-ஆம் தேதி வரை இந்த தடை நீடிக்கும் என்று தமது இடைக்கால உத்தரவில் கூறியுள்ளார்.

அரசியில் சாசன அடிப்படையில் அமைந்துள்ள ஆளுநர் பதவியில் இருப்பவர்கள் மீது தனிப்பட்ட முறையில் அவதூறாக பேசுவதை அனுமதிக்க முடியாது என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாக அளிக்கப்பட்டுள்ள பேச்சுரிமையை ஒருவரை அவமதிப்பதற்காக பயன்படுத்துவதையும் ஏற்க முடியாது என்றும் நீதிபதி அந்த உத்தரவில் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இஸ்லாமியர்களால் மொஹரம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

நபிகள் நாயகத்தின் பேரன் ஹுசேன் அலியின் தியாகத்தைக் குறிக்கும் வகையில் மொஹரம் அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் தாஹியா ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

பிரசித்திபெற்ற நாகப்பட்டினம் நாகூர் தர்க்காவில் வழக்கமாக நடைபெறும் மொஹரம் சிறப்பு தொழுகை இன்று காலை நடைபெற்றது. வீதிகளில் இஸ்லாமியர்கள் பர்சியா எனும் பைத்து பாடல்கள் பாடி தொழுகை நடத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) ---35 – செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் உள்ள பழைய அரசு பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகளை இயக்குவதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கோவை மேட்டுப்பாளையம் புதிய பேருந்து நிலையத்தில் 20 புறநகர் பேருந்து மற்றும் நகர்புற பேருந்தை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவைத் தேர்தலுக்கு முன் ஆயிரம் புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாகத் தெரிவித்தார்.

தருமபுரி, திருவள்ளூர், மதுரை, விருதுநகர் உள்ளிட்ட பகுதிகளில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் திரு சிவகங்கர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - சிவசங்கர் ) -40-- செகண்ட்*

**[]<<<>>>[]**

நில மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட தமிழக முன்னாள் அமைச்சர் திரு எம் ஆர் விஜயபாஸ்கரை 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க கரூர் குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து அவர் திருச்சி மத்திய சிறையில் வைக்கப்பட்டார்.

**[]<<<>>>[]**

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கன மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்பட்டுள்ள உபரி நீர் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) --- 53 செகண்ட்</u>*

**[]<<<>>>[]**

ஓமன் நாட்டின் மஸ்கட் நகர் மசூதியில் நடந்த துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒன்பதாக அதிகரித்துள்ளது.

மருத்துவமனையில் 28 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

மஸ்கட் துப்பாக்கி சூட்டை அடுத்து அங்குள்ள அமெரிக்க தூதரகம், அமெரி.க்க மக்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சகாஜா எமாலப்பள்ளி - ஜப்பானின் ஹிரோகோ குவாட்டா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 4-6, 10-7 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் சாரா **Daavettila** –ரஷ்யாவின் மரியா கோனோநோவா இணையை வென்றது.

**[]<<<>>>[]**

சர்வதேச டென்னிஸ் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் சுமித் நாகல் ஐந்து இடங்கள் முன்னேறி 68-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் திண்டுக்கல் அணி – திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.